# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 57 — 1973 අප්‍රේල් 27 වැනි සිකුරාදා — 1973.04.27

57 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு எப்பிறல் மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் — — | 177 | வரவு செலவுக் கூற்றுக்கள் — — | — |
| பதவிகள்— வெற்றிடம் — — | — | வரவு செலவுத் திரட்டுகள் — — | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் — | — | ஆதன விற்பனைகள் — — — | — |
| துணை விதிகள் — — — | 181 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் — — | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத்தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — | நானாவித அறிவித்தல்கள் — — — | 186 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கந்தானைப் பட்டின சபை

பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச்சட்டம்

(176ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட விதி.

பீலிக்ஸ். ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1973.4.9

விதி

(176 ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச்சட்டத்தின் 3 ம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 19̣9 ஏப்ரல் 4 ன் 7,004 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 1971 பெப்புருவரி 26 இன் 14,947 ஆம் இலக்க் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட விதியினால் கடைசியாகத் திருத்தப்பட்ட விதிகள் கந்தானைப் பட்டின சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் உள்ள பிரதேசத்துடன் அவ்விதிகள் சம்பந்தப்பட்டவரையில், அவற்றின் அ 3 ம் விதியில் காட்டப்பட்டுள்ள கட்டண அளவுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய அளவுத் திட்டத்தை வைப்பதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன.

| | 9 நாட்களுக்கு மேற்படாத காலத்துக்கு ஒரு நாளுக்குரியகட்டணம் | 9 நாட்களுக்கு மேற்பட்ட ஆனால் 1 மாதத்துக்கு மேற்படாத காலத்துக்கு | 1 மாத காலத்துக்கு மேற்பட்ட ஆனால் 6 மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு | 6 மாத காலத்துக்கு மேற்பட்ட ஆனால் 10 மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு | 10 மாத காலங்களுக்கு மேற்பட்ட ஆனால் 1 வருடத்துக்கு மேற்படாத காலத்துக்கு |
|---|---|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 299 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப்பட்டிருக்குமிடத்து .. | 5.0 .. | 25.00 .. | 100.00 .. | 100.00 .. | 150. 00 |
| 299 பேருக்கு மேற்பட ஆனால் 399 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசனவசதி செய்யப்பட்டிருக்குமிடத்து .. | 8.0 .. | 50.00 .. | 100.00 .. | 150.00 .. | 225.00 |
| 399 பேருக்கு மேற்பட ஆனால் 499 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசனவசதி செய்யப்பட்டிருக்குமிடத்து .. | 10.00 .. | 75.00 .. | 150.00 .. | 225.00 .. | 300.00 |
| 499 பேருக்கு மேற்பட்ட ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப்பட்டிருக்குமிடத்து .. | 15.00 .. | 150.00. .. | 225.00 .. | 300.00 .. | 400.00 |

4–704—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆடு மே மீ 5 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

## பட்டினங்கள், கிராமங்கள், பெயர்கள் மாற்றம்

இதனகத்துள்ள I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட கிராமத்தின் பெயர் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட பெயரால் பதிலீடு செய்யப்படுகிறது என்பதைப் பொதுமக்கள் தகவலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர்.

அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 4 ந் உ.

| மாவட்டம் | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| மாத்தளை | .. புறிஜ்ஜலஹேனேகம | .. எகொடபுறிஜ்ஜல |

4–658—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57

---

## மின்சக்திச் சட்டம்

1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டவாறுன (205 ம் அத்தியாயமாம்) மின்சக்தி பற்றிய சட்டத்தின் 46 ம் பிரிவின் கீழும், நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சரைக் கலந்தாலோசித்த பின்னர் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அளித்த அங்கீகாரத்துடனும் யாழ்ப்பாணம் மாவட்டத்து காரைநகர் வடக்கு கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

பீ. சிறிவர்த்தன,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மார்ச் மீ 30 ந் உ.

### ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகளில்—

"சட்டம்" எனில் 1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (205 ம் அத்தியாயமாம்) மின்சக்திச் சட்டம் எனப் பொருள்படும்.

"உத்தரவுப் பத்திரம்" எனில் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்டத்து காரைநகர் வடக்கு கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபைக்கு வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரம் எனப் பொருள்படும்.

"உத்தரவுப்பத்திரக்காரர்" எனில் யாழ்ப்பாணம் மாவட்டத்து காரைநகர் வடக்கு கிராமப்பிரதேசத்து கிராமச் சபை எனப் பொருள்படும்.

2. உத்தரவுப்பத்திரக்காரரிடமிருந்து மின்சக்தி பெறவிரும்பும் எவரும்—

(1) விநியோகம் தேவைப்படுவதற்குக் குறைந்தது பதினன்கு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வழங்கும் படிவத்தில் உத்தரவுப்பத்திரக்காரருக்கு விண்ணப்பம் செய்யவேண்டும், மேலும்

(2) வழங்கு கம்பிகளுக்கான செலவுகளை உத்தரவுப்பத்திரக்காரருக்கு முற்பணமாகச் செலுத்தவேண்டும், அல்லது உத்தரவுப் பத்திரக்காரர் அவ்விதங் கேட்டால், சட்டத்தின் 33 ம் பிரிவின் கீழ் உத்தரவுப்பத்திரதாரருடன் எழுத்திலான ஒரு ஒப்பந்தமும் செய்தல் வேண்டும்.

3. (அ) உத்தரவுப்பத்திரகாரரின் மின்சக்தி வழங்கு மூலக்கம்பிகளுடன் இணைக்கக் கருதியுள்ள நிறுப்பு எதனதும் கம்பியிடும் வேலையே மின்னேந்திரவியற் பொறியியலாளர் கழகத்தினுல் விதிக்கப்பட்ட கம்பியிடுதல் பற்றிய ஒழுங்குவிதிகளுக்கமைய அவ்வேலையைச் செய்து முடிக்கக்கூடிய திறமையுள்ள ஒரு தொழிற்ருபனத்திடம் அல்லது தனியார் ஒருவரிடம் பாவனையாளர் ஒப்படைத்தல் வேண்டும். அவ்வேலையை உத்தரவுப்பத்திரகாரரினுல் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் பரிசோதித்து பரீட்சித்துப் பார்த்த பின்னரும், அவ்வேலை முன்னே சொல்லப்பட்ட கம்பியிடுதல் பற்றிய ஒழுங்குவிதிகளுக்கமைவாகச் செய்யப்பட்டுள்ளதென உத்தரவுப் பத்திரகாரர் திருப்தியடைந்த பின்னரும் மாத்திரமே அந்நிறுப்புக்கு மின்சக்தி விநியோகம் இணைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அந்நிறுப்பு சொல்லப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைவாக இல்லாவிட்டால் அந்நிறுப்பு அவ்வொழுங்கு விதிகளுக்கமைய அமைக்கப்படும் வரையில் அம்மனையகத்துக்கு மின்சக்தி விநியோகம் செய்யப்படமாட்டாது.

4. மின்சக்தி உபயோகிக்கும் ஒவ்வொருவரும் அம்மின்சக்திக்காக உத்தரவுப்பத்திரத்தில் விவரிக்கப்பட்ட விகிதத்தில் பணம் செலுத்த வேண்டும்.

5. (அ) பாவனையாளரின் மனையகத்தில் இருக்கும் சேவைவடக்கம்பிகளின் பாகமும் அம்மின்மாற்றியும், பிரதான பியூஸ்களும், மானியும் தாங்கு பலகையும் உத்தரவுப் பத்திரகாரரின் சொத்துக்களாகவே இருக்கும். எக்காரணத்தைக் கொண்டும் உத்தரவுப்பத்திரகாரரினுல் அதிகாரமளிக்கப்பட்ட அவரது ஊழியரல்லாத எவரும் அவற்றை அகற்றவோ அல்லது தலையிடவோ கூடாது.

(ஆ) பாவனையாளரின் புறத்தில் இருக்கும் உத்தரவுப்பத்திரகாரரின் பிரதான பியூஸ், மானி ஆகியவற்றின் கம்பிகள், வடக்கம்பிகளையும் வேறு உபகரணங்களையும் பராமரிப்பது பாவனையாளரின் பொறுப்பாகும்.

(இ) சட்டத்தின் 47 (3) ம் பிரிவின்படி துணிக்கப்பட்ட நிறுப்பு எதும் மீண்டும் இணைக்கப்பட்டால், அந்நிறுப்பை பரிசோதித்து மீண்டும் இணைப்பதற்குரிய சலார், உத்தரவுப் பத்திரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அறவிடப்படும். அதனைப் பாவனையாளர் முற்பணமாகச் செலுத்திவிட வேண்டும்.

(ஈ) எப்பாவனையாளரதும் கம்பிகளின் அல்லது பொருத்துக்களின் சில பாகங்களில் ஒழுக்கு இருக்கும் பட்சத்தில், தமது மனையகத்தின் மானிகாட்டும் சக்திச் செலவு யாவற்றுக்கும் மின்சக்திச் சட்டத்தின் 41ம் பிரிவிற்கிணங்க அவர் பணஞ் செலுத்தப் பாத்திரராவார்.

6. (அ) தமது மனையகத்துக்கு மின்சக்தி வழங்கப்பட்ட பின்னர் ஏற்கனவே உபயோகித்து வந்ததை விடப் பெரிய அளவான எந்த விளக்கையும், விசிறியையும் அல்லது மோத்தரையும் உபயோகிக்க அல்லது மேலதிக விளக்கெதையும் அல்லது மின்சக்தியைச் செலவிடும் உபகரணம் எதையும் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பொருத்தவோ அல்லது தமது மனையகத்தில் பொருத்தப்பட்டுள்ள கம்பிகளை மாற்றவோ அல்லது விஸ்தரிக்கவோ விரும்பும் பாவனையாளர் ஒவ்வொருவரும், அப்படியான வேலை ஆரம்பிப்பதற்குக் குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரகாரருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(ஆ) முன்பிருந்ததைவிடப் பெரிய விஸ்தரிப்பு, விளக்கு, விசிறி அல்லது மோத்தர் எதனையும் அல்லது மேலதிக விளக்கு அல்லது சக்தியைச் செலவிடும் வேறு உபகரணம் எதையும் அவ்வித விஸ்தரிப்பு விளக்கு, விசிறி, மோத்தர், மேலதிக விளக்கு அல்லது வேறு உபகரணத்தை உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் பார்வையிட்டுச் சோதித்துத் திருப்திப்படாத வரையில் எப்பாவனையாளரும், தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவேனும் பிரதான நிறுப்புடன் இணைக்கவோ, இணைக்கச் செய்யவோ அல்லது நிறுவவோ கூடாது.

7. (அ) எவ்வீட்டிலும் உத்தரவுப்பத்திரகாரரின் பியூஸ் உருகிப் போகும் பட்சத்தில் பாவனையாளர் உடனடியாக உத்தரவுப்பத்திரகாரருடைய விசைநிலைய அல்லது சகவிசைநிலைய, அவ்வதற்கேற்றவாறு பொறுப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

(ஆ) உத்தரவுப்பத்திரகாரரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரையும் தவிர்ந்த வேறெவரும், உத்தரவுப்பத்திரகாரரின் சொத்தான உருகிப்போன பியூசை மாற்றக்கூடாது.

(இ) பாவனையாளருக்கு அல்லது உத்தரவுப்பத்திரகாரருக்குச் சொந்தமான பியூஸ் எதனையும் மாற்றுவதற்காக உத்தரவுப்பத்திரகாரருடைய உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரதும் உதவி அவசியப்பட்டால் உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறான கட்டணம் ஒன்று பாவனையாளரின் அந்த மாதக் கணக்கில் சேர்க்கப்படும்.

8. வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் முழு அல்லது பகுதி சக்தி விநியோகத்தடைப்பாட்டினால் உண்டாகும் நஷ்டம் அல்லது சேதம் எதற்கும் உத்தரவுப்பத்திரக்காரர் பாவனையாளருக்குப் பொறுப்பாளியாகமாட்டார்.

9. சட்டத்தின் 45 ம் பிரிவின்படிக்குத் துணிக்கப்பட்டிருந்தபின் ஒரு நிறுப்பு மீண்டும் இணைக்கப்படுமாயின், சோதித்து மீளவும் இணைப்பதற்காக உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறான ஒரு கட்டணத்தைப் பாவனையாளர் முற்பணமாகக் கொடுத்து விடவேண்டும்.

10. (அ) கணக்குக் கொடுக்கப்பட்ட திகதியன்றே சகல கட்டணங்களும் கொடுபடவேண்டியனவாகக் கருதப்படும்.

(ஆ) ஒரு கணக்கில் பிழையிருப்பதாகச் செய்யப்படும் முறைப்பாடு எதுவும் பாவனையாளருக்குக் கணக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கிழமைக்குள் செய்யப்படாவிட்டால் உத்தரவுப்பத்திரகாரர் அதனை ஏற்கமாட்டார்.

11. (அ) தனது வீட்டுக்கு மின்சக்தி விநியோகம் தேவைப்படாத பாவனையாளர் ஒவ்வொருவரும் உத்தரவுப்பத்திரகாரருக்கு எழுத்தில் மூன்று முழுநாளைய அறிவித்தல் கொடுக்கவேண்டும்.

(ஆ) (அ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்படாதவிடத்து தனது வீட்டிலுள்ள உத்தரவுப்பத்திரகாரரின் உபகரணங்களுக்குப் பாவனையாளர் பொறுப்பாளியாக இருப்பதுடன், பாவனையாளருக்கு அவ்விநியோகம் தேவையில்லையென உத்தரவுப்பத்திரகாரருக்கு அறிவித்தல் கிடைத்த தினத்திலிருந்து மூன்று நாட்களுக்கு அவ்வீட்டில் செலவாகிய சக்தி முழுவதற்கும் பணஞ்செலுத்துவதற்கும் பொறுப்பாளியாக இருப்பர். எனினும் சொல்லப்பட்ட மூன்று நாட்கள் கடக்கு முன்னர் உத்தரவுப்பத்திரகாரரால் விநியோகம் துணிக்கப்பட்டால், துணிக்கப்பட்ட நேரம்வரைக்கும் அவ்வீட்டில் செலவான மின்சக்திக்கு மாத்திரமே பாவனையாளர் பணஞ் செலுத்தப்பாத்திரராவர்.

12. இருந்து வரும் இணைப்புகளுக்கு சேர்த்தல், மாற்றுதல்; செம்மைப்படுத்தல் உட்பட மின்சார இணைப்புவேலை எதனையும் தொடங்குதற்கு இரண்டு நாட்களுக்குக் குறையாத அறிவித்தல் ஒன்றை உத்தரவுப்பத்திரகாரருக்குக் கொடுத்து உத்தரவுப்பத்திரகாரரின் ஒரு உத்தியோகத்தர் உத்தேச வேலையைப் பரிசோதிக்க வாய்ப்பளிக்காது தொடங்கக்கூடாது.

13. உத்தரவுப்பத்திரகாரருக்கு அறிவித்தல் கொடுத்து அவரது முன்னங்கீகாரத்தைப் பெறுது எம்மனையகத்திலும் புதிய இணைப்பு எதற்கும் மின்சார வேலை செய்யப்படின் உத்தரவுப்பத்திரகாரருக்கு முறைப்படியான அறிவித்தல் கிடைத்து அவசியமான பரிசோதனைகள் செய்யப்படுகின்றவரை அத்தகைய வேலை செய்யப்பட்டுள்ள மனையகத்துக்கு மின்சக்தி வழங்குதற்கு உத்தரவுப்பத்திரகாரர் மறுக்கலாம்.

14. உத்தரவுப்பத்திரகாரரின் மின்சார விநியோக மூலக்கம்பிகளோடு ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ள நிறுப்பு எதற்கும், உத்தரவுப்பத்திரகாரருக்கு முன்னறிவித்தல் கொடுத்து அனுமதி பெறுமல் விஸ்தரிப்பு ஏதும் செய்யும் பட்சத்தில் அந்நிறுப்பு முற்றாக உத்தரவுப் பத்திரகாரருடைய மின்சாரவிநியோக மூலக்கம்பிகளிலிருந்து துண்டிக்கப்படப்பாத்திரமானதாகும்.

15. எந்த நிறுப்பையும் மீண்டும் இணைப்பதற்காக விண்ணப்பம் ஒவ்வொன்றும் உத்தரவுப்பத்திரகாரர் அதற்கென வைத்துள்ள படிவத்தில் செய்யப்பட்டு மின்சக்தி தேவைப்படுவதற்கு நாற்பத்தெட்டு மணித்தியாலத்திற்குக் குறையாத காலத்துள் உத்தரவுப்பத்திரகாரரின் காரியாலயத்திற் கொடுக்கப்படவேண்டும்.

4–703—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57

---

### இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டம்

(272 ஆம் அத்தியாயமான) இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவின் கீழ் அதன் சார்பில் உரிய அதிகாரியான, அதாவது விசேட ஆணையாளரினால் ஆக்கப்பட்டு அப்பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் உறுதிப்படுத்தப்பட்ட ஒழுங்கு விதி.

மேலதிகச் செயலாளர்.
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ௵ ஏப்பிரில் ௴ 4 ந் உ.

### ஒழுங்கு விதி

1953 ஏப்பிரல் 10 இன் 10,517 ஆம் இலக்கக் கசெற்றிலும் 1954 ஏப்பிரல் 9 இன் 10,662 ஆம் இலக்கக் கசெற்றிலும் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் திருத்தப்பட்டவாறான 1950 ஒற்ருேபர் 27 இன் 10,168 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள், அதன்கண்ணுள்ள 10 ஆம் ஒழுங்கு விதியின் (1) என்றும் பந்தியில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தஞ் செய்யப்படுகிறது :—

(1) "1.50" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக "5.00" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலம், அத்துடன்

(2) "1.00" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக "3.00" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலம்.

4–642—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57

---

### இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டம்

(272 ம் அத்தியாயமான) இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் தக்க அதிகாரத் தாபனத்தால், அதாவது ருகமை பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அப்பிரிவால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக்கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் உறுதிப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகள்.

காமினி விக்கரமநாயக,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ௵ ஏப்பிரல் ௴ 4 ந் உ.

### ஒழுங்கு விதிகள்

1. எவரேனும் எக்கொல்களத்திலாயினும் எம்மிருகத்தையும்—

(அ) அம்மிருகம் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரால் பரிசோதிக்கப்பட்டு, மனிதர் உண்பதற்காக கொல்லுதற்குத் தகுதியானதென அவரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி,

அத்துடன்

(ஆ) இவ்வொழுங்கு விதியின் (அ) பந்தியின் கீழ் அம்மிருகம் அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து 24 மணித்தியாலங்கள் கழிந்த பின்னர் எச்சமயத்திலும்,

அத்துடன்

(இ) எத்தினத்திலேயும் காலை 7 மணிக்கும் நண்பகல் 12 மணிக்குமிடையேயன்றி கொல்லலாகாது. ஆயின் தலைவர், அவர் புறநடையானதெனக் கருதும் சந்தர்ப்பங்களில் இதில் சொல்லப்படுவதல்லாது வேறு எச்சமயத்திலேனும் எம்மிருகத்தையும் கொல்ல அதிகாரம் அளிக்கலாம்.

2. 1 ம் ஒழுங்குவிதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கொல்களவளவிலிருந்து உயிருடன் அப்புறப்படுத்தப்பட்டுள்ள மிருகம் எதையும் எது மறுபடியும் அந்த ஒழுங்கு விதியின் கீழ் பரிசோதிக்கப்பட்டு மனிதர் உண்பதற்காக கொல்லுதற்குத் தகுதியானதென அங்கீகரிக்கப்பட்டாலன்றி கொல்களம் எதிலும் எவரேனும் கொல்லலாகாது.

3. (1) எம்மிருகமும் 1 ம் ஒழுங்குவிதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நோயற்றதாக அல்லது மனிதர் உண்பதற்காகக் கொல்லப்படுதற்குத் தகுதியற்றதாகக் காணப்படின் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் அதனைக் கொல்லுவதைத் தடுக்கலாம்.

(2) இந்த ஒழுங்குவிதியின் கீழ் கொல்லப்படுவது தடுக்கப்பட்ட எம்மிருகத்தையும் எவரும் கொல்லலாகாது.

4. ஒரு கொல்கள வளவுக்குள் எம்மிருகத்தையும் கொண்டுவரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் அவ்வளவில் தங்கியிருக்கும்போது அதற்குப் போதிய உணவும் தண்ணீரும் கிடைக்கச் செய்வதற்கு அவசியமான எல்லாக் காரியங்களையும் செய்தல் வேண்டும்.

5. ஒரு கொல்கள வளவுக்குள் எம்மிருகத்தையும் கொண்டுவரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் கொல்லப்படுதற்குத் தகுதியற்றதென நிராகரிக்கப்பட்டால் உடனே அம்மிருகத்தை அவ்வளவிலிருந்து அப்புறப்படுத்த அல்லது அப்புறப்படுத்துவிக்கவேண்டும்.

6. கொல்களம் எதிலும் கொல்லப்பட்ட எம்மிருகத்தினதும் சடலம் அல்லது கழிவு இறைச்சி நோயுள்ளதென அல்லது மனிதர் உண்பதற்குத் தகுதியற்றதென சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் அபிப்பிராயப் படுவாராயின் அவர், உடனே அந்தச் சடலம் அல்லது கழிவு இறைச்சி விற்பதற்கு வைக்கப்படாமல் அல்லது மனிதர் உண்பதற்கு உபயோகிக்கப் படாமல் தடுத்தற்கேதுவாக அச்சடலத்தை அல்லது கழிவு இறைச்சியை அழிக்கவேனும் ஒழிக்கவேனும் செய்தல் வேண்டும். சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரின் எவலின் பேரிலன்றி எவரும் அத்தகைய சடலத்தை அல்லது கழிவு இறைச்சியை கொல்களத்திலிருந்து அப்புறப்படுத்தலாகாது.

7. கொல்களக் காப்பாளர், மனிதர் உண்பதற்காகக் கொல்லப்படுதற்குத் தகுதியானதென அங்கீகரிக்கப்பட்டிராத அல்லது 3 ஆம் ஒழுங்கு விதியின் கீழ் கொல்லப்படுவது தடுக்கப்பட்டுள்ள எம்மிருகத்தையும் அங்கு கொல்லுவதற்கு அனுமதிக்கலாகாது.

8. மனிதர் உண்பதற்கான எம்மிருகத்தினதும் சடலத்தையும், அச்சடலத்தின் முன் தொடைகளிலும் பின் தொடைகளிலும் கொல்களக்காப்பாளரால் " ரீ. சீ. ஆர் " என்னும் எழுத்துக்கள் இடப்பட்டிருந்தாலன்றி கொல்களத்திலிருந்து எவரும் அப்புறப்படுத்தலாகாது.

9. எம்மிருகமும் வேறு எம்மிருகத்தினதும் முன்னிலையிலேனும் அவ்வளவில் முன்னர் கொல்லப்பட்ட ஒவ்வொரு மிருகத்தினதும் சடலம் அப்புறப்படுத்தப்பட்டு அல்லது மறைக்கப்பட்டு அவ்வளவு சுத்தம் செய்யப் படும்வரையிலேனும் கொல்லப்படல் ஆகாது.

10. கொல்களம் எதற்கும் பொறுப்பாளியாயிருப்பவர், தொற்று நோய், ஒட்டுநோய் அல்லது சருமநோய் எதனுனும் வருந்தும் அல்லது சமீபகாலத்தில் வருந்திய அல்லது அத்தகைய நோயினால் வருந்தும் எவருக்கும் சமீபகாலத்தில் பணிவிடை செய்த எவரையும் காத்தற்கால எல்லை கழியும்வரை அக்கொல்களத்துக்குள் பிரவேசிக்கவேனும் எம்மிருகத்தையும் கொல்லுவதில் பங்கு கொள்ளவேனும் அனுமதிக்கலாகாது.

11. நியாயமான எல்லா வேளைகளிலும் எந்தக் கொல்களத்துக்கும் செல்வதும் அதனைப் பரிசோதிப்பதும் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தருக்கு சட்டமுறையாகும். அதற்குப் பொறுப்பாளியாயிருப்பவர் அன்னாருக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்தல் வேண்டும்.

12. சபையால் தாபிக்கப்பட்ட கொல்களம் எதையும் உபயோகிப்பதற்கு கீழ்க்காணும் வீதப்படியான ஒரு கட்டணம் சபையிடம் முதலில் செலுத்தப்படவேண்டும். அக்கட்டணம் செலுத்தப்பட்டமைக்குச் சான்றான அலுவலகப் பற்றுச் சீட்டு ஒன்றின்றி எம்மிருகத்தையும் கொல்லலாகாது.

| | ரூ. ச. |
|---|---|
| மாடுகளுக்கு, தலைக்கு .. .. | 5 0 |
| வெள்ளாடுகளுக்கு, தலைக்கு .. .. | 2 50 |

13. கொல்களக் காப்பாளர் ஒவ்வொருவரும் சபை பணிக்கின்றவிதத்தில் கொல்களத்தில் கொல்லப்படும் மிருகம் ஒவ்வொன்றையும்பற்றிய விபரங்களின் பதிவேடு ஒன்றை வைத்திருக்கவேண்டும்.

14. இந்த ஒழுங்குவிதிகளால் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தருக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள், சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரின் பொதுவான அல்லது சிறப்பான எவலின்படி செயலாற்றும் உத்தியோகத்தர் எவராலும் பிரயோகிக்கப்படலாம்.

15. இந்த ஒழுங்கு விதிகளில்—

" தலைவர் " என்பது சபைத் தலைவர் எனப் பொருள்படும். " சபை " என்பது ருக்கமைப் பட்டினசபை எனப்பொருள்படும்.

4–643—27.04.73 ந திகதிய வர்த்தமானி இல. 57

---

## மின்சக்திச் சட்டம்

1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (205 ம் அத்தியாயமாம்) மின்சக்தி பற்றிய சட்டத்தின் 46 ம் பிரிவின் கீழும், நீர்ப்பாசன மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சரைக் கலந்தாலோசித்த பின்னர் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல் அமைச்சர் அளித்த அங்கீகாரத்துடனும் கொழும்பு மாவட்டத்திலுள்ள கற்றுன கிராமச்சபையால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஏப்ரில் மீ 5 ந உ.

### ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகளில்—

" சட்டம் " எனில் 1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (205 ம் அத்தியாயமாம்) மின்சக்திச் சட்டம் எனப் பொருள்படும் ;

" உத்தரவுப்பத்திரம் " எனில் சட்டத்தின் 2 ம் பிரிவின்கீழ் கொழும்பு மாவட்டத்திலுள்ள கற்றுன கிராமச்சபைக்கு வழங்கப் பட்ட உத்தரவுப்பத்திரம் எனப் பொருள்படும் ;

" உத்தரவுப்பத்திரக்காரர் " எனில் கொழும்பு மாவட்டத்திலுள்ள கற்றுன கிராமச்சபை எனப் பொருள்படும்.

2. உத்தரவுப்பத்திரக்காரரிடமிருந்து மின்சக்தி பெறவிரும்பும் எவரும்—

(1) விநியோகம் தேவைப்படுவதற்குக் குறைந்தது பதினுன்கு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வழங்கும் படிவத்தில் உத்தரவுப்பத்திரக்காரருக்கு விண்ணப்பஞ் செய்யவேண்டும் ; மேலும்

(2) வழங்கும் கம்பிகளுக்கான செலவுகளை உத்தரவுப்பத்திரக்காரருக்கு முற்பணமாகச் செலுத்த வேண்டும், அல்லது உத்தரவுப் பத்திரதாரர் அவ்விதங் கேட்டால், சட்டத்தின் 33 ம் பிரிவின் கீழ் உத்தரவுப் பத்திரதாரருடன் எழுத்திலான ஒரு ஒப்பந்தமும் செய்தல் வேண்டும்.

(3) (அ) உத்தரவுப் பத்திரகாரரின் மின்சக்தி வழங்கு மூலக் கம்பிகளுடன் இணைக்கக் கருதியுள்ள நிறுப்பு எதனதும் கம்பியிடும் வேலையை மின்னேந்திரவியற் பொறியியலாளர் கழகத்தினுல் விதிக்கப்பட்ட கம்பியிடுதல் பற்றிய ஒழுங்கு விதிகளுக்கமைய அவ் வேலையைச் செய்து முடிக்கக்கூடிய திறமையுள்ள ஒரு தொழிற்றுபனத்திடம் அல்லது தனியார் ஒருவரிடம் பாவனையாளர் ஒப்படைத்தல் வேண்டும். அவ்வேலையை உத்தரவுப் பத்திரக்காரினுல் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் பரிசோதித்து, பரீட்சித்துப்பார்த்த பின்னரும், அவ்வேலை முன்னே சொல்லப்பட்ட கம்பியிடுதல்பற்றிய ஒழுங்கு விதிகளுக்கமைவாகச் செய்யப்பட்டுள்ளதென உத்தரவுப்பத்திரகாரர் திருப்தியடைந்த பின்னரும் மாத்திரமே அந்நிறுப்புக்கு மின்சக்தி விநியோகம் இணைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அந்நிறுப்பு சொல்லப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைவாக இல்லாவிட்டால் அந்நிறுப்பு அவ்வொழுங்கு விதிகளுக்கமைய அமைக்கப்படும்வரையில் அம்மனையகத்துக்கு மின்சக்தி விநியோகம் செய்யப்படமாட்டாது.

4. மின்சக்தி உபயோகிக்கும் ஒவ்வொருவரும் அம் மின்சக்திக்காக உத்தரவுப்பத்திரத்தில் விவரிக்கப்பட்ட விகிதத்தில் பணம் செலுத்த வேண்டும்.

5. (அ) பாவனையாளரின் மனையகத்தில் இருக்கும் சேவைவடக் கம்பிகளின் பாகமும் அம்மின்மாற்றியும், பிரதான பியூஸ்களும், மானியும், தாங்கு பலகையும் உத்தரவுப் பத்திரகாரரின் சொத்துக்களாகவே இருக்கும். எக்காரணத்தைக் கொண்டும் உத்தரவுப்பத்திரக்காரரினுல் அதிகாரமளிக்கப்பட்ட அவரது ஊழியரல்லாத எவரும் அவற்றை அகற்றவோ அல்லது தலையிடவோ கூடாது.

(ஆ) பாவனையாளரின் புறத்தில் இருக்கும் உத்தரவுப் பத்திரகாரரின் பிரதான பியூஸ், மானி ஆகியவற்றின் கம்பிகள், வடக்கம்பிகளையும் வேறு உபகரணங்களையும் பராமரிப்பது பாவனையாளரின் பொறுப்பாகும்.

(இ) சட்டத்தின் 47(3) ம் பிரிவின்படி துணிக்கப்பட்ட நிறுப்பு எதும் மீண்டும் இணைக்கப்பட்டால், அந்நிறுப்பை பரிசோதித்து மீண்டு இணைப்பதற்குரிய சலார், உத்தரவுப்பத்திரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அறவிடப்படும். அதனைப் பாவனையாளர் முற்பணமாகச் செலுத்திவிடவேண்டும்.

(ஈ) எப்பாவனையாளரதும் கம்பிகளின் அல்லது பொருத்துகளின் சில பாகங்களில் ஒழுக்கு இருக்கும் பட்சத்தில், தமது மனையகத்தின் மானிகாட்டும் சக்திச் செலவு யாவற்றுக்கும் மின்சக்திச் சட்டத்தின் 41 ம் பிரிவிற்கிணங்க அவர் பணஞ் செலுத்தப் பாத்திரராவார்.

6. (அ) தமது மனையகத்துக்கு மின்சக்தி வழங்கப்பட்ட பின்னர், ஏற்கனவே உபயோகித்துவந்ததைவிடப் பெரிய அளவான எந்த விளக்கையும் விசிறியையும் அல்லது மோத்தரையும்

விசிறியையும் அல்லது மோத்தரையும் உபயோகித்த அல்லது மேலதிகமாக விளக்கெதையும் அல்லது மின் சக்தியைச் செலவிடும் உபகரணம் எதையும் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பொருத்தவோ அல்லது தமது மனையகத்தில் பொருத்தப்பட்டுள்ள கம்பிகளை மாற்றவோ அல்லது விஸ்தரிக்கவோ விரும்பும் பாவனையாள ஒவ்வொருவரும், அப்படியான வேலை ஆரம்பிப்பதற்குக் குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(ஆ) முன்பிருந்ததை விடப் பெரிய விஸ்தரிப்பு, விளக்கு, விசிறி அல்லது மோத்த எதனையும் அலலது மேலதிக விளக்கு அல்லது சக்தியைச் செலவிடும் வேறு உபகரணம் எதையும் அவ்வித விஸ்தரிப்பு, விளக்கு, விசிறி, மோத்தர், மேலதிக விளக்கு அல்லது வேறு உபகரணத்தை உத்தரவுப் பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் பார்வையிட்டுச் சோதித்துத் திருப்திப்படாத வரையில் எப்பாவனையாளரும், தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவேனும் பிரதான நிறுப்புடன் இணைக்கவோ இணைக்கச் செய்யவோ அல்லது நிறுவவோ கூடாது.

7. (அ) எவ்வீட்டிலும் உத்தரவுப்பத்திரக்காரரின் பியூஸ் உருகிப் போகும் பட்சத்தில் பாவனையாளர் உடனடியாக உத்தரவுப் பத்திரக்காரருடைய விசைநிலைய அல்லது சகவிசை நிலைய, அவ்வதற்கேற்றவாறு பொறுப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

(ஆ) உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரையும் தவிர்ந்த வேறெவரும் உத்தரவுப்பத்திரக்காரரின் சொத்தான உருகிப்போன. பியூசை மாற்றக்கூடாது.

(இ) பாவனையாளருக்கு அல்லது உத்தரவுப்பத்திரக்காரருக்குச் சொந்தமான பியூஸ் எதனையும் மாற்றுவதற்காக உத்தரவுப் பத்திரக்காரருடைய உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரதும் உதவி அவசியப்பட்டால், உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறான கட்டணம் ஒன்று பாவனையாளரின் அந்த மாதக் கணக்கில் சேர்க்கப்படும்.

8. வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் முழு அல்லது பகுதி சக்தி விநியோகத் தடைப்பாட்டினால் உண்டாகும் நஷ்டம் அல்லது சேதம் எதற்கும் உத்தரவுப் பத்திரக்காரர் பாவனையாளருக்குப் பொறுப்பாளியாக மாட்டார்.

9. சட்டத்தின் 45 ம் பிரிவின்படிக்குத் துணிக்கப்பட்டிருந்தபின் ஒரு நிறுப்பு மீண்டும் இணைக்கப்படுமாயின், சோதித்து மீள்வும் இணைப்பதற்காக உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறான ஒரு கட்டணத்தைப் பாவனையாளர் முற்பணமாகக் கொடுத்துவிடல் வேண்டும்.

10. (அ) கணக்குக் கொடுக்கப்பட்ட திகதியன்றே சகல கட்டணங்களும் கொடுபட வேண்டியனவாகக் கருதப்படும்.

(ஆ) ஒரு கணக்கில் பிழையிருப்பதாகச் செய்யப்படும் முறைப்பாடு எதுவும் பாவனையாளருக்குக் கணக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கிழமைக்குள் செய்யப்படாவிட்டால் உத்தரவுப்பத்திரக்காரர் அதனை ஏற்கமாட்டார்.

11. (அ) தனது வீட்டுக்கு மின்சக்தி விநியோகம் தேவைப்படாத பாவனையாளர் ஒவ்வொருவரும் உத்தரவுப்பத்திரக்காரருக்கு எழுத்தில் மூன்று முழு நாளைய அறிவித்தல் கொடுக்க வேண்டும்.

(ஆ) (அ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்படாத விடத்து தனது வீட்டிலுள்ள உத்தரவுப்பத்திரக்காரரின் உபகரணங்களுக்குப் பாவனையாளர் பொறுப்பாளியாக இருப்பதுடன், பாவனையாளருக்கு அவ்விநியோகம் தேவையில்லையென உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கிடைத்த தினத்திலிருந்து மூன்று நாட்களுக்கு அவ்வீட்டில் செலவாகிய சக்தி முழுவதற்கும் பணஞ் செலுத்துதற்குப் பொறுப்பாளியாக இருப்பார். எனினும், சொல்லப்பட்ட மூன்று நாட்கள் கடக்கு முன்னர் உத்தரவுப் பத்திரக்காரரால் விநியோகம் துணிக்கப்பட்டால் துணிக்கப்பட்ட நேரம் வரைக்கும் அவ்வீட்டில் செலவான மின்சக்திக்கு மாத்திரமே பாவனையாளர் பணம் செலுத்தப் பாத்திரராவார்.

12. இருந்து வரும் இணைப்புகளுக்குச் சேர்த்தல், மாற்றுதல், செம்மைபடுத்தல் உட்பட்ட மின்சார இணைப்புவேலை எதனையும் தொடங்குதற்கு இரண்டு நாட்களுக்குக் குறையாத அறிவித்தல் ஒன்றை உத்தரவுப் பத்திரக்காரருக்குக் கொடுத்து உத்தரவுப்பத்திரக்காரரின் ஒரு உத்தியோகத்தர் உத்தேச வேலையைப் பரிசோதிக்க வாய்ப்பளிக்காது தொடங்கக்கூடாது.

13. உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கொடுத்து அவரது முன்னங்கீகாரத்தைப் பெறாது எம்மனையகத்திலும் புதிய இணைப்பு எதற்கும் மின்சார வேலை செய்யப்படின் உத்தரவுப்பத்திரக்காரருக்கு முறைப்படியான அறிவித்தல் கிடைத்து அவசியமான பரிசோதனைகள் செய்யப்படுகின்றவரை, அத்தகைய வேலை செய்யப்பட்டுள்ள மனையகத்திற்கு மின்சக்தி வழங்குதற்கு உத்தரவுப்பத்திரக்காரர் மறுக்கலாம்.

14. உத்தரவுப்பத்திரக்காரரின் மின்சார விநியோக மூலக்கம்பிகளோடு ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ள நிறுப்பு எதற்கும், உத்தரவுப் பத்திரக்காரருக்கு முன்னறிவித்தல் கொடுத்து அனுமதிபெறுமல் விஸ்தரிப்பு எதும் செய்யும் பட்சத்தில் அந்நிறுப்பு முற்றாக உத்தர பத்திரக்காரருடைய மின்சார விநியோக மூலக்கம்பிகளிலிருந்து துண்டிக்கப்படப் பாத்திரமானதாகும்.

15. எந்த நிறுப்பையும் மீண்டும் இணைப்பதற்காக விண்ணப்பம் ஒவ்வொன்றும் உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வைத்துள்ள படிவத்தில் செய்யப்பட்டு மின்சக்தி தேவைப்படுவதற்கு நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குக் குறையாத காலத்துள் உத்தரவுப் பத்திரக்காரரின் காரியாலயத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

16. 17.1.1958 இன் 11,242 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

4–705—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57

---

## துணை விதிகள்

எல். டி.—பி. 34/45

### இரத்தினபுரி மாநகரசபை

மாநகரசபைகள் கட்டளைச் சட்டம்

(252 ம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 267, 272 (4) ஆகிய பிரிவுகளின் கீழ் இரத்தினபுரி மாநகரசபையினால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச்சட்டத்தின் 268 ம் பிரிவினால் தமக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு பிரதிநிதிகள் சபையினால் உறுதிப்கடுத்தப்பட்ட துணைவிதிகள்.

ஜீ. பி. விக்கிரமநாயக்க,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சின்
மேலதிகச் செயலாளர்.

கொழும்பு, 9.4.1973.

### துணை விதிகள்

1966 யூலை 29 ந் திகதிய 14,706 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட துணை விதியினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான, 1931 ஒக்ரோபர் 23 ந் தேதிய 7,889 ம் இலக்கக் கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட இரத்தினபுரி மாநகரசபையினது நீருத்வி வேலைகள் சம்பந்தமான துணைவிதிகள் இத்தால் பின்வருமாறு மேலுந் திருத்தப்படுகின்றன.

(1) 25 ஆம் துணைவிதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய துணைவிதியை இடுவதன் மூலம் :—

25. (அ) (1) வீட்டுப் பாவனைக்கான தண்ணீர், சபையின் இஷ்டப்படி, மானி (மீற்றர்) அல்லது வேறு விதத்தில் விநியோகிக்கப்படலாம். அத்துடன் அதற்கான கட்டணங்கள் காலத்துக்குக் காலம் சபையின் தீர்மானத்தால் நிர்ணயிக்கப்படக்கூடிய விகிதங்களுக்கேற்ப இருக்கும்.

(2) வீட்டுப் பாவனைக்கு மானியினாலல்லாது வேறெதனாலும் தண்ணீர் விநியோகிக்கப்படுமிடத்து, பின்வரும் கட்டணங்கள் முற்பணமாகச் சபைக்குக் கட்டப்படவேண்டும் :—

½ அங்குல வடிகுழாயுடன் மட்டுங் கூடிய ஒரு தனியார் சேவை இணைப்புக்கு—கால் வருடத்திற்கு அல்லது அதன் ஒரு பாகத்திற்கு—ரூபா 3.00.

(ஆ) (1) வீட்டுப் பாவனைக்கு அல்லாத வேறு நோக்கங்களுக்காக, சபையின் இஷ்டப்படி தண்ணீர் மானியினால் அல்லது வேறெதனாலும் விநியோகிக்கப்படலாம். எனினும், விதியளவில், அத்தகைய விநியோகங்கள், மானியினாலாயிருத்தல் வேண்டும். அத்தகைய விநியோகங்களுக்கான கட்டணங்கள் பின்வருமாறாக விருத்தல் வேண்டும் :—

பின்வரும் நோக்கங்களுக்காகத் தண்ணீர், மானியினால் அளவிடப்படாது, விநியோகிக்கப்படுகின்ற எல்லாவிடத்தும், பின்

வரும் அல்லது சபையினால் காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்படும் விகிதப்படியான கட்டணம், முற்பணமாகச் சபைக்குக் கட்டப்படுதல் வேண்டும்.

வருவனவற்றிற்காக முற்ருக அல்லது பாகமாகப் பாவிக்கப்படும் வளவொன்றின்பொருட்டு :—

(அ) வாயுப்பானத் தொழிற்சாலை ("ஐஸ்") தொழிற்சாலை, "ஐஸ் கிறீம்" உற்பத்திச்சாலை, மாதமொன்றுக்கு ரூபா 15.

(ஆ) மோட்டார் வாகனங்களைக் கழுவுதற்காகத் தண்ணீர் பாவிக்கப்படுகின்ற சேவை நிலையம்—மாதமொன்றுக்கு ரூபா 20.

(இ) விளையாட்டுக்களரி—மாதமொன்றுக்கு ரூபா 10.

(ஈ) கல்லூரி, பாடசாலை விடுதிச்சாலைகள்—மாதமொன்றுக்கு ரூபா 8.

(உ) "பாபர் சலூன்"—மாதமொன்றுக்கு அல்லது பாகத்துக்கு ரூபா 5.

(ஊ) தனியார் மருந்துச்சாலைகள், சத்திரசிகிச்சை நிலையங்கள் மற்றும் இதே போன்ற நிலையங்கள்—மாதமொன்றுக்கு அல்லது பாகத்திற்கு ரூபா 15.

(எ) இதர சகல வர்த்தக முயற்சிகள் அல்லது மேற்குறிப்பிட்டவைக்குட்படாதவை—மாதமொன்றுக்கு அல்லது பாகத்துக்கு ரூபா 5.

(ஏ) பாடசாலை அல்லது கல்லூரி விடுதிச்சாலைகள் தவிர்ந்த விடுதி வீடு அல்லது தங்கும் வீடுகள்—மாதமொன்றுக்கு அல்லது பாகத்துக்கு ரூபா 10.

(ஐ) கட்டட வேலைகட்கு—மாதமொன்றுக்கு அல்லது பாகத்துக்கு ரூபா 50.

(ஒ) அரசாங்கத் திணைக்களங்கள்—

(i) ½ அங்குல வடிகுழாய் ஒன்றுக்கு மட்டும் மாதமொன்றுக்கு ரூபா 3, அதே சேவையை அல்லது வளவைச் சேர்ந்த ஒவ்வொரு மேலதிக ½ அங்குல வடிகுழாய்க்கும்—மாதமொன்றுக்கு அல்லது பாகத்துக்கு ரூபா 2.

(ii) ¾ அங்குல வடிகுழாய் ஒன்றுக்கு மட்டும் மாதமொன்றிற்கு ரூபா 5. அதே சேவையை அல்லது வளவைச் சேர்ந்த ஒவ்வொரு மேலதிக ¾ அங்குல வடிகுழாய்க்கும்—மாதமொன்றுக்கு ரூபா 3.

(2) வீட்டுப் பாவனைக்கு அல்லாத வேறு நோக்கங்களுக்காக மானி மூலம் விநியோகிக்கப்பட்ட தண்ணீருக்குரிய கட்டணம், 1000 கலனுக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் 1 ரூபா 50 சதம் வீதப்படி அல்லது காலத்திற்குக் காலம் சபையினால் நிர்ணயிக்கப்படும் விகிதப்படியாகும்.

(இ) விசேட தேவைகளுக்காக வாகனங்கள் மார்க்கமாகக் கொண்டு செல்லப்பட்டு பீப்பாக்களில் தண்ணீர் விநியோகிக்கப்படுமிடத்து, பின்வரும் அல்லது சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானமூலம் நிர்ணயிக்கப்படும் விகிதப்படியான, கட்டணங்கள் சபைக்கு முற்பணமாகக் கட்டப்படுதல் வேண்டும்.

(1) கிழமை நாட்களிலும் நோன்மதி நாட்களுக்கு முந்திய நாட்களிலும் அலுவலக நேரங்களில்—பீப்பா ஒன்றிற்கு ரூபா 3.

(2) நோன்மதி, அரசாங்க விடுமுறை நாட்களிலும் கிழமை நாட்களின் அலுவலக நேரங் கடந்த நேரங்களிலும்—பீப்பா ஒன்றிற்கு ரூபா 4. பொதுநலன் பொருட்டான வேலைகளைப் பொறுத்த வரை, 25. இ (1), (2) ஆகிய துணை விதிகளின் கீழான கட்டணங்கள், மாநகரசபை முதல்வரின் இஷ்டப்படி அறவிடப்படாது விடப்படலாம்.

(2) 47. (3) ஆம் துணைவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை இடையிடுதல் மூலம் :—

" (4) சொந்தத் தண்ணீர்ச் சேவை எதனதும் அமைப்பில் உபயோகிக்கப்படும் சகல செப்புக்குழாய்களும், 200 இருத்தல் சதுர அங்குலம் அமுக்கம் உள்ளனவாயும் பின்வரும் நிறைகளுக் கிணக்கமாகவும் இருத்தல் வேண்டும் :—

⅜ அங். உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 19 இருத்தல்.
½ அங். உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 27 இருத்தல்.
¾ அங். உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 39 இருத்தல்.
1 அங். உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 62 இருத்தல்.
1¼ அங். உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 76 இருத்தல்.
1½ அங். உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 91 இருத்தல்.
2 அங். உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 140 இருத்தல்.

(5) சொந்தத் தண்ணீர்ச் சேவை எதனதும் அமைப்பில் உபயோகிக்கப்படும் சகல ஈயக்குழாய்களும் சதுர அங்குல மொத்தம் 200 இருத்தல் அமுக்கம் உள்ளவாயும் பின்வரும் நிறைகளுக் கிணக்கமாகவும் இருத்தல் வேண்டும் :—

⅜ அங். உள்விட்டம், ஒவ்வோரு 100 நீளடிக்கும் 4·5 இருத்தல்.
½ அங். உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 6 இருத்தல்.
¾ அங். உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 9 இருத்தல்.
1 அங். உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 12·5 இருத்தல்.
1¼ அங். உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 16 இருத்தல்.
1½ அங். உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 20 இருத்தல்.
2 அங். உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 28 இருத்தல்.

(6) சொந்தத் தண்ணீர்ச் சேவை எதனதும் அமைப்பில் உபயோகிக்கப்படும் பொலிதீன் குழாய்கள் (குளிர்ந்த நீருக்கான திண்மை குறைந்த பொலிதீன் குழாய்களுக்கான) பிரித்தானியத் தரம் 1972 : 1953 க்கு ஒப்ப உஷ்ண ஏற்றத்துக்கேற்றபடியான உறுதிக்குறைவுக் கிளிவுவைத்து 100 பாகை "பரன்கையிற்" உஷ்ணத்தில் ஆகக்குறைந்தது 150 அடி தொழிற்பாட்டு அமுக்கத்துக்கு ஏற்றதாக இருக்கவேண்டும்.

(7) சொந்தத் தண்ணீர்ச் சேவை எதனதும் அமைப்பில் உபயோகிக்கப்படும் பொலிவெனில் குளோரைட் குழாய்கள் யாவும் பின்வரும் நிறைகளுக்கு இணக்கமாக இருக்கவேண்டும் :—

| அங்குலத்தில் துளை அளவு | | ஒவ்வொரு 100 அடிக்கும் இருத்தலில் பாரம் |
|---|---|---|
| ½ | .. | 16·8 |
| ¾ | .. | 20·4 |
| 1 | .. | 29·6 |
| 1¼ | .. | 35·6 |
| 1½ | .. | 51·8 |
| 2 | .. | 73·9 |

அத்துடன் தொழிற்பாட்டு அமுக்கம் இதன் கீழ் காட்டப்பட்டுள்ளவாறுகவிருத்தல் வேண்டும்.

| அங்குலத்தில் துளை அளவு | | 75 பாகை பாரன்கையிற்றில் தொழிற்பாட்டமுக்கம் அடி நீரில் | | 150 பாகை பாரன்கையிற் தொழிற்பாட்டமுக்கம் அடிநீரில் |
|---|---|---|---|---|
| ⅜ | .. | 1260 | | 680 |
| ½ | .. | 1220 | .. | 657 |
| ¾ | .. | 980 | .. | 530 |
| 1 | .. | 922 | .. | 495 |
| 1¼ | .. | 760 | .. | 415 |
| 1½ | .. | 610 | .. | 322 |
| 2 | .. | 610 | .. | 322 |

(3) 52 ம் துணைவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய துணைவிதிகளை இடையிடுதல் மூலம் :—

" 53. (1) எவ்விடயத்தேனும், தண்ணீர் விநியோகத்தின் பொருட்டு ஆணையாளர் கட்டுப்பணமொன்றைச் செலுத்துமாறு வேண்டலாம்.

(2) குறிப்பாக, தண்ணீர் விநியோகத்தின் நிபந்தனையொன்ருக, ஆணையாளரினால் மதிப்பிடப்பட்டவாருன, மூன்றுமாத காலத்தில் பாவிக்கப்படக்கூடியதான தண்ணீர்க் கட்டணத்திற்குச் சமமானதொரு தொகையை, கட்டுப்பணமாக ரொக்கமாகச் செலுத்துமாறு, ஆணையாளர் வேண்டலாம். எனினும், இத்தகைய கட்டுப்பணம் வைக்கப்படுதல், கணக்கெதுவும் தீர்க்கப்படாமைக்காக அமைப்பைத் துண்டிப்பதற்கான ஆணையாளரின் உரிமைக்குப் பாதகமாயமையாது.

54. (1) தமது வளவை விட்டுச் செல்லுந் தருவாயிலுள்ள பாவனையாளர் ஒவ்வொருவரும், அவர்கள் அவ்வாறு செய்யவிருக்கும் நோக்கம்பற்றி எழுத்துமூலமாக மூன்று முழுநாள் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(2) பந்தி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தல் கொடுபடாதவிடத்து, குறிப்பிட்ட வளவு காலியாக்கப்பட்டுள்ளதெனும் தகவல் ஆணையாளருக்குக் கிடைத்து மூன்று நாட்கள் ஆகும் வரை அவ்வளவில் பாவிக்கப்பட்ட தண்ணீர் யாவுக்கும் பாவனையாளரே பொறுப்புடையவராகக் கருதப்படுவார் :

எனினும் ஆணையாளரினால், குறிப்பிடப்பட்ட மூன்று நாட்களுக்கு முன்னதாகவே வளவிற்குரிய விநியோகம் துண்டிக்கப்பட்டிருப்பின், துண்டிக்கப்பட்ட காலம்வரை பாவிக்கப்பட்ட தண்ணீருக்கே பாவனையாளர் பொறுப்புடையவராகக் கருதப்படுவார். ".

4–702—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57

**கலேவெலப் பட்டின சபை**

பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச்சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் கலேவெலப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 153 ம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்.

ஜீ. பீ. விக்ரமநாயக,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1973 ம் ஆண்டு ஏப்ரில் மீ 7 ந உ.

**துணை விதிகள்**

1. (1) இத்துணைவிதிகள் 1973 ம் ஆண்டின் கலேவெல முறைச் சந்தை ஒழுங்கு விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) " கலேவெல முறைச் சந்தை " என வழங்கப்படவேண்டியதும் அறிய வேண்டியதுமான முறைச் சந்தை ஒன்று ஒவ்வொரு புதன், சனிக்கிழமைகளிலும் அல்லது சபையால் நிச்சயிக்கப்படும் வேறேதுமொரு நாளில் சபையால் நடாத்தப்படுதல் வேண்டும்.

2. (1) தலைவரின் அதிகாரத்தால் அல்லது அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டொன்றை உடையவராக அல்லது அத்தகைய உடையவரின் வேலையாளராக அல்லது முகவராக இருந்தாலன்றி அல்லது அத்தகைய அனுமதிச்சீட்டின் நிபந்தனைகளுக்கிணங்கவன்றி எவரும் முறைச் சந்தையின் வளவில் உள்ள ஏதேனும் விற்பிடத்தை அல்லது வெற்றிடத்தை பயன்படுத்தவோ அதில் நிலைகொள்ளவோ ஆகாது.

(2) முதலாம் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிச்சீட்டும் பொருளளவில் இதற்கான முதலாம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் இருக்கவேண்டும் என்பதோடு அது வழங்கப்படும் நாளுக்கு மட்டும் வலுவுள்ளதாக இருக்கவும் வேண்டும்.

3. இரண்டாம் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டுடைய ஒவ்வொருவரும் இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வீதங்களிலான ஒரு கட்டணத்தை முறைச் சந்தையின் வளவினுள்ள விற்பிடத்தை அல்லது வெற்றிடத்தைப் பயன்படுத்துவதற்காகக் கொடுத்தல் வேண்டும்.

4. மூன்றும் துணைவிதியின் கீழ் கொடுபடற்பாலதான கட்டணங்களை சேகரித்தற்கென அலுவலர் ஒருவரை சபையானது வேலையில் அமர்த்தாவிட்டால் அது கட்டணங்கள் சேகரித்தற்கான உரிமையை—

(அ) தனிப்பட்ட உடன்படிக்கை மூலம், அல்லது

(ஆ) கேள்விப்பத்திரங்களைக் கோருதல் மூலம், அல்லது

(இ) அந்த உரிமையை ஏலத்தில் விடல் மூலம்

அங்கீகரிக்கப்பட்ட ஆளொருவருக்குக் குத்தகைக்கு விடலாம்.

5. (1) இரண்டாம் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிச்சீட்டுடையார் எவரும் முறைச் சந்தையில் ஏதேனும் இறைச்சியை விற்றலோ விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்தலோ ஆகாது, ஆயின் எப்படியிருப்பினும் அத்தகைய பொருள் அல்லது பண்டம் அதற்கெனத் தலைவரால் வழங்கப்படும் சிறப்பனுமதிச்சீட்டின் அதிகாரத்தின் கீழ் விற்கப்படலாம் அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டிவைக்கப்படலாம்.

(2) அத்தகைய அனுமதிச்சீட்டை வழங்குவதற்குப் போதிய நல்ல காரணங்கள் இருக்கின்றனவென்று தலைவர் திருப்திப்பட்டாலொழிய சிறப்பனுமதிச்சீட்டெதுவும் வழங்கப்படலாகாது.

6. இரண்டாம் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டை யாருக்கிடையிலும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் வேலையாட்களுக்குமிடையிலும், அவர்களுக்கும், பொது மக்களுக்குமிடையிலும் எழும் சந்தையைப் பயன்படுத்தல் பற்றிய பிணக்குகள் எவையும் முறைச் சந்தையின் வளவினுள் கடமைசெய்து கொண்டிருக்கும் தலைவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் தீர்த்துவைக்கப்படலாம்.

7. முறைச்சந்தையின் வளவில் அமைதியானது, அந்நோக்கத்திற்கெனச்சபையால் நியமிக்கப்பட்டவரும் சந்தையின் வளவில் கடமை புரிந்துகொண்டு இருப்பவருமான ஓர் அலுவலரால் நிலைநாட்டப்படும்.

8. பொருட்கள் வாங்குவதற்கென அல்லது அவற்றை விற்றற்கென சந்தைக்குவரும் ஒவ்வோர் ஆளும் ஏதேனும் பிணக்கைத் தீர்த்துவைக்கும் முகமாக அல்லது அமைதியை நிலைநாட்டுவதற்காக சபையின் அலுவலர் ஒருவரால் அல்லது பொலிசு அலுவலர் ஒருவரால் இடப்படும் சட்டப்படியான கட்டளைக்கு இணங்கி ஒழுகுதல்வேண்டும்.

9. முறைச் சந்தையின் வளவினுள் எவரும்—

(அ) சமையல் வேலை எதுவும் மேற்கொள்ளலாகாது, அல்லது

(ஆ) குழப்பமான முறையில் நடந்துகொள்ளல் ஆகாது, அல்லது சத்தம் செய்தல் ஆகாது, அல்லது குழப்பம் செய்தல் ஆகாது, அல்லது வேறெவரேனும் ஆளுடன் சண்டையிடல் ஆகாது, அல்லது மானபங்கமான முறைகேடான அல்லது இடக்கம் மொழிகள் பேசுதல் ஆகாது, அல்லது

(இ) சந்தை வளவைவிட்டு வெளியேறும்படி சபையின் அலுவலர் ஒருவரால் அல்லது கிராமசேவகர் ஒருவரால் அல்லது பொலிசு அலுவலர் ஒருவரால் அல்லது தலைவரின் அதிகாரத்தின் கீழ் செயற்படும் எவரேனும் ஆளால் கட்டளையிடப்பட்டதன் பின்னர் அவர் அவ்வாறு நிற்பதற்குத் திருப்தியான காரணம் காட்ட முடியாத நிலையில் அங்கு நிற்றலோ அங்குமிங்கும் அலைதலோ அல்லது,

(ஈ) சூதாட்டத்திலீடுபடுதலோ கூடாது.

10. (1) தலைவர் அல்லது சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் அல்லது தலைவரின் அதிகாரத்தின் கீழ் செயற்படும் பொது சௌக்கியப் பரிசோதகர் எவரும் முறைச் சந்தையின் வளவினுள் விற்பனைக்கென வெளிக்காட்டி வைக்கப்பட்டிருப்பதும் உடனலத்திற்குகந்ததல்லவென்று அவர்க்குத் தோன்றுவதுமான ஏதேனும் பொருளைப் பரிசோதித்தலும் அதைக் கைப்பற்றுதலும் அவர்க்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) முதலாம் பந்தியின் கீழ் கைப்பற்றப்பட்ட பொருள் ஒன்று, உடனலத்திற்குகப்பில்லாததென்று அரசாங்க மருத்துவ அலுவலரால் சான்றளிக்கப்பட்டு இருக்கின்றவிடத்து அத்தகைய பொருளானது எவரின் உரிமையிலிருந்து அது கைப்பற்றப்பட்டதோ அவருக்கு நட்டஈடு எதுவும் கொடுபடாமலே அழிக்கப்படலாம்.

11. (1) முறைச்சந்தையைக் கண்காணிப்பதற்கென தலைவரால் நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் அல்லது ஆள் ஒருவர் அவரது கடமைகளைப் புரியும்போது அவரை எவரும் மறிக்கவோ, தடுக்கவோ, தடைசெய்யவோ, அவருக்குத் தொந்தரவு கொடுக்கவோ கூடாது.

(2) கட்டணங்களைச் சேகரிப்பதற்கெனச் சபையால் நியமிக்கப்பட்ட ஒரு ஆள் அல்லது (அத்தகைய கட்டணம் சேகரிப்பதற்கான உரிமை குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றவிடத்து) அத்தகைய குத்தகை எடுப்பவர் தமது கடமையைப் புரியும்போது அவரை எவரும் மறிக்கவோ, தடுக்கவோ, தடைசெய்யவோ, அவருக்குத் தொந்தரவு கொடுக்கவோ கூடாது.

12. ஆளெவரும்—

(அ) முறைச் சந்தை நிகழ்த்தப்படும் நாளுக்கு முந்திய நாளன்று பிற்பகல் 3 மணிக்கு முன்னர் முறைச் சந்தை வளவில் கொட்டில் போடுதலோ கூடாரம் அடித்தலோ, பாய்கள் அல்லது சாக்குகளை இடுதலோ கூடாது, அல்லது

(ஆ) முறைச் சந்தை நிகழ்ந்த நாளுக்கு அடுத்த நாள் காலை 9 மணிக்கும் பின்னர் கொட்டில் எதையும், கூடாரம் எதையும், பாய் எதையும், சாக்கெதையும் அல்லது வெறெந்தப் பொருள் எதையும் சந்தைவளவில் இருக்கவிடுதலாகாது.

13. தலைவர் அல்லது தலைவரின் அதிகாரத்தின் கீழ் தொழிற்படும் வேறுயாரேனும் சபை அலுவலர் முறைச் சந்தை நிகழ்ந்த நாளுக்கு அடுத்த நாள் 9 மணிக்குப் பின்னர் சந்தை வளவில் கிடக்கும் எவையேனும் கொட்டில்களை, கூடாரங்களை, பாய்களை, சாக்குகளை அல்லது வேறெவையேனும் பொருட்களை அகற்றுதல் அவர்களுக்குச் சட்டமுறையாதல் வேண்டும்.

14. இந்தத் துணைவிதிகள் எவற்றையேனும் மீறும் ஒவ்வொரு மீறுகையும் 100 ரூபாவிற்கு மிகாத ஒரு குற்றப்பணத்தால் தண்டிக்கப்படற்பாலதாதல் என்பதோடு அத்தகைய மீறுகை தொடர்ந்தும் செய்யப்பட்டு வருகின்றவிடத்து அத்தகைய மீறுகைக்காகத் தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அல்லது அவ்வாறு மீறுகை செய்யப்படுகின்றது என்பதை குறித்துக் கூறும் எழுத்து மூல அறிவித்தலொன்று தலைவரால் அல்லது தலைவர் தீர்க்கமளிக்கப்பட்ட அலுவலரொருவரால் அத்தகைய மீறுவோருக்கு விடுக்கப்பட்டதன் பின்னர் அத்தகைய மீறுகை தொடர்ந்து செயற்பட்டுவருகின்ற ஒவ்வொரு நாளுக்கும் 25 ரூபாவுக்கும் மிகாத மேலதிகக் குற்றப்பணம் ஒன்றுறும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

### அட்டவணை I

கலேவெலப் பட்டின சபை

திகதி :

கலேவெல புதன்கிழமை/சனிக்கிழமை முறைச்சந்தை.
இடமிருந்து ரூபா சதம் ஐப் பெற்றுக்கொண்டேன்.

| | ரூ. ச. |
|---|---|
| 1. 50 சதுர அடிக்கு மேற்பட்ட பரப்பளவுடைய விற்பிடமொன்றுக்கு (விற்பிட இல. ) | |
| 2. 50 சதுர அடிக்குக் குறைந்த பரப்பளவுடைய விற்பிடமொன்றிற்கு (விற்பிட இல. ) | |
| 3. 50 சதுர (அடிக்குமேற்பட்ட பரப்பளவுடைய வெற்றிடத்திற்கு (........) | |
| 4. 50 சதுர அடிக்கு மேற்படாத பரப்பளவுடைய வெற்றிடமொன்றிற்கு............ | |
| 5. ........வாழைப்பழங்களுக்கு........ | |
| 6. ........இளநீர்களுக்கு ........ | |
| 7. ........தேங்காய்களுக்கு ........ | |
| 8. ........பாரம்பாக்குகளுக்கு ........ | |
| 9. ........எண்ணிக்கையான இதர பொருட்களுக்கு | |
| மொத்தம் | |

........ ரூபா ........ சதத்தை மாத்திரம் பெற்றுக் கொண்டேன்.

————,
சேகரிப்பாளரின் கையொப்பம்.

### அட்டவணை II

| நாளொன்றுக்கு | ரூ. ச. |
|---|---|
| (1) 50 சதுர அடிக்கு மேற்பட்ட பரப்புடைய ஒரு விற்பிடத்துக்கு | 1 50 |
| (2) 50 சதுர அடிக்கு மேற்படாத பரப்புடைய ஒரு விற்பிடத்திற்கு | 1 0 |
| (3) 50 சதுர அடிக்கு மேற்பட்ட பரப்புடைய வெற்றிடத்துக்கு | 0 75 |
| (4) 50 சதுர அடிக்கு மேற்படாத பரப்புடைய வெற்றிடத்திற்கு | 0 50 |
| (5) வாழைப்பழக்குலையொன்றிற்கு .. | 0 05 |
| (6) இளநீர் ஒன்றிற்கு .. | 0 01 |
| (7) தேங்காயொன்றிற்கு .. | 0 01 |
| (8) ஒருபாரம் பாக்குக்கு .. | 0 75 |
| (9) இதர பொருட்களுக்கு .. | 0 25 |

4–644—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57

---

### பொலநறுவைப்பட்டின சபை

பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்

(256 அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 152,156 ஆகிய பிரிவுகளின் கீழ் பொலநறுவைப்பட்டினசபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 153 ம் பிரிவினுல் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

காமினி விக்கிரமநாயக,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1973 ந் ஆண்டு ஏப்ரில் மீ 4 ந் ௳.

#### துணைவிதிகள்

1. (268 ம் அத்தியாயமான) வீடமைப்பு, நகரச்சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அங்கீகாரத்துக்கெனச் சமர்ப்பிக்கப்படும் புதிய கட்டங்களுக்கான அல்லது ஏற்கனவே இருக்கும் கட்டடங்களுக்கு மாற்றங்கள் செய்வதற்கான விண்ணப்பங்களையும், மாதிரிப்படங்களையும், வரைவுப்படங்களையும் விவரக் கூற்றுக்களையும் பரிசோதிப்பதற்காவும், கருத்திற்கொள்வதற்காகவும் இதனோடுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விகிதங்களின்படி தீர்மானிக்கப்படும் ஒரு கட்டணத்தைக் கட்டுதல் வேண்டும்.

2. (1) 1வது துணைவிதியின் கீழ்க் கட்டவேண்டிய கட்டணத் தொகையைப் பொலநறுவைப்பட்டின சபைத் தலைவர் அதனைக் கட்டும்படி கேட்டு ஏழு நாட்களுக்குள், அங்கீகாரங்கேட்டு அல்லது சம்மதம் கேட்டு விண்ணப்பிப்பவர் கட்டவேண்டும்.

(2) இத்துணைவிதியின் முந்திய பந்தியில் விதிக்கப்பட்ட காலத்துக்குள் அக்கட்டணத்தைக் கட்டத் தவறும் ஒவ்வொருவரும் ஒரு தவறைச் செய்தவராவதோடு குற்றத் தீர்ப்பு அவிக்கப்படுகையில் நூறுரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணம் செலுத்தவும் ஆளாதல் வேண்டும்.

(3) 1 ம் துணைவிதியில் குறிப்பிடப்பட்ட கட்டணம் கட்டப்படும்வரை, விண்ணப்ப மாதிரிப்படம், வரைவுப்படம் அல்லது விவரக்கூற்று எதையும் பரிசோதித்து கருத்திற்கொள்ளலாகாது.

1. புதிய கட்டங்களுக்கான அல்லது ஏற்கனவேயுள்ள கட்டடங்களின் தளப்பரப்பை விஸ்தரிப்பதனை உட்படுத்தும் மாற்றங்களுக்கான மாதிரிப் படங்களுக்கு—

| | ரூ. ச. |
|---|---|
| (அ) மொத்தத் தளப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற்படாவிடத்து | 5 0 |
| (ஆ) மொத்த தளப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 1,000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 15 0 |
| (இ) மொத்தத் தளப்பரப்பு 1,000 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 3000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 25 0 |
| (ஈ) ஒவ்வொரு மேலதிகமான 1000 சதுர அடிகொண்டகூறுக்கும் அல்லது அக்கூறின் பகுதிக்கும் .. | 25 0 |
| 2. (அ) தளப்பரப்பை விஸ்தரிப்பதனை உட்படுத்தும் ஏற்கெனவே இருக்கும் கட்டடங்களின் மாற்றங்களுக்கான மாதிரிப் படங்களுக்கு தற்போதுள்ள தளப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற்படுமிடத்து .. | 10 0 |
| (ஆ) 500 சதுர அடியைக் கொண்ட ஒவ்வொரு மேலதிகக் கூற்றுக்கும் அல்லது அதன் பாகத்துக்கு .. | 10 0 |
| 3. புதிதாக மாதிரிப்படம் எதையும் சமர்ப்பிக்காது அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதற்காய விண்ணப்பமொன்றுக்கு .. | 5 0 |

இவ்வட்டவணையில் "தளப்பரப்பு" என்பது நிலத் தளத்திலுள்ள அல்லது வேறெந்தத் தளத்திலுமுள்ள வெளி எனப் பொருள்படும்.

4–645—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57

---

### பெலியத்தைப் பட்டினம்

பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 152,156 ஆகியபிரிவுகளின் கீழ் பெலியத்தைப் பட்டின விசேட ஆணையாளரினுல் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச்சட்டத்தின் 153 ம் பிரிவினுல் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சரினுல் அங்கீகரிக்கப்பட்ட துணை விதி.

பீ. சிறிவர்த்தன,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1973 ந் ஆண்டு மார்ச்சு மீ 31 ந் ௳.

#### துணைவிதி

நீர் வழங்கல் சம்பந்தமாக பெலியத்தைப் பட்டினசபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமத்துணைவிதிகளின் XXV ம் பாகம் 41 ம் துணைவிதியின் (1) ம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

41 (1) வீட்டுக் கருமங்களுக்காகத் தண்ணீர் வழங்கப்படுமிடத்து மானி ஒன்று பொருத்தப்பட்டிருந்தாலன்றி அத்தகைய ஒவ்வொரு தனியார் தண்ணீர் இணைப்புச் சம்பந்தமாகவும் பின்வரும் கட்டணங்கள் காலாண்டுக்கொருமுறை சபைக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

| | ரூ. ச. |
|---|---|
| $\frac{3}{4}$ அங்குல விட்டத்தைக்கொண்ட தண்ணீர் இணைப்பு ஒன்றிற்கு .. | 9 0 |
| $\frac{1}{2}$ அங்குல விட்டத்தைக்கொண்ட தண்ணீர் இணைப்பு ஒன்றிற்கு .. | 6 0 |

4–590—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57

எல். டி.—பி 39/50

மானிப்பாய் பட்டினசபை

பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் மானிப்பாய் பட்டினசபையாலாக்கப்பட்டு அக் கட்டளைச்சட்டத்தின் 153 ம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங் களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 10 ந வ.

துணை விதிகள்

1. இத்துணைவிதிகள் 1973 ம் ஆண்டின் மானிப்பாய பட்டினசபை விளம்பரத் துணைவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. தலைவரால் அதன் பொருட்டு வழங்கப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரத் தின் அதிகாரத்தின் பேரிலன்றி, வீதி, தெரு, வாய்க்கால் அல்லது ஏரி எதிலுமிருந்து பார்க்கக் கூடிய வண்ணம் விளம்பரம் எதனையும் எவரும் பார்வைக்கு வைத்தல் அல்லது வைக்கச் செய்தல் ஆகாது :

ஆயினும், எப்படியிருப்பினும், இத்துணைவிதியின் முற்போந்த ஏற் பாடுகள் பின்வரும் விளம்பரங்கள் எதற்கும், அத்தகைய விளம்பரம் ஒளியலங்கார விளம்பரமாக அல்லது வான் அடையாளமாக இருந்தா லன்றி ஏற்புடையனவாதலாகா :—

(அ) தேறிய வருமானங்களை ஒரு தரும கைங்கரியத்தின் பொருட்டு உபயோகிப்பதற்கான ஒரு களியாட்டம் தொடர்பிலான விளம் பரம்;

(ஆ) களியாட்டம் நடைபெறவிருக்கும் வளவிலேயே பார்வைக்கு வைக் கப்பட்டிருக்கும் எக்களியாட்டத்தையும் பற்றிய ஒரு விளம்பரம்;

(இ) அரசாங்கத்தால் பார்வைக்கு வைக்கப்பட்ட ஒரு விளம்பரம் ;

(ஈ) சமய, அரசியல் அல்லது வேறு பொதுக்கூட்டம் சம்பந்தமான ஒரு விளம்பரம் ;

(உ) எக்கட்டிடத்தினதும் சாரளங்களிலிருக்கும் ஒரு விளம்பரம் ;

(ஊ) "வாடகைக்கு" எனும் ஒரு விளம்பரம் ;

(எ) " விற்பனைக்கு " எனும் ஒரு விளம்பரம் ;

(ஏ) வீட்டுக்குரிய ஒரு பெயர்த்தகடு ;

(ஐ) தொழில் நோக்கங்களுக்காக உபயோகிக்கப்படும் ஒரு சதுர அடிக்கு மேற்படாத பரப்புடைய ஒரு பெயர்த்தகடு ;

(ஒ) வாகனமொன்றின் சொந்தக்காரரினது பெயரையும் முகவரியை யும் காட்டுகின்றதான தொழில் நோக்கங்களுக்கு உபயோ கிக்கப்படும் வாகனமொன்றின் மீதான ஒரு விளம்பரம் ; அல்லது

(ஓ) அங்கு நடத்தப்படும் ஒரு தொழிலை அல்லது வியாபாரத்தைப் பற்றிய அவ் வளவில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு விளம்பரம்.

3. (1) எந்த விளம்பரத்தையும் பார்வைக்கு வைத்தற்கு அனுமதி கோரும் ஒவ்வொரு விண்ணப்பமும், அவ்விளம்பரத்தைப் பார்வைக்கு வைக்கத் தொடங்குதற்குக் கருதியுள்ள திகதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும் : எனினும், எப்படியிருப்பினும், குறிப்பிட்டவொரு விடயத்தின் விசேட சூழ்நிலை களில் இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்ட கால எல்லையுள் அனுப்பப்படாத அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்தையும் தலைவர் ஏற்றுக்கொள்ளலாம்.

(2) ஓராம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றுடனும் விண்ணப்பதாரர் பார்வைக்கு வைக்கக் கருதியுள்ள விளம்பரத்தின் பிரதியொன்றை அனுப்புதல் வேண்டும்.

(3) ஓராம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஒரு விண்ணப்பத்தைத் தலைவர் அங்கீகரிக்கும்கால் அவ்விளம்பத்தைப் பார்வைக்கு வைத்தற்கான அனுமதிப்பத்திரத்துக்காக இதனுடன் இருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டிருக்கும் விதங்களின்படி கணக்கிடப்படும் ஒரு கட்டணத்தைச் செலுத்தும்படி விண்ணப்பதாரரை அவர் பணித்தல் வேண்டும். அத்த கைய கட்டணத்தைச் செலுத்தும் வரை அத்தகைய அனுமதிப்பத்திரம் விண்ணப்பதாரருக்கு வழங்கப்படலாகாது.

4. (1) ஒரு விளம்பரத்தைப் பார்வைக்கு வைத்தற்கு எவருக்காயி னும் ஓர் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுமிடத்துத் தலைவர் அத்தகைய வரை—

(அ) அவ்வனுமதிப்பத்திரத்தின் இலக்கத்தையும் திகதியையும் அவ் விளம்பரத்தின் ஒவ்வொரு பிரதியிலும் உட்படுத்தும்படி ; அல்லது

(ஆ) அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணம் செலுத்தப்பட்டதற்கு அடையாளமாக முத்திரையிடுதற் பொருட்டு அவ்விளம்பரத்தின் ஒவ்வொரு பிரதியையும் தலைவர் முன் கொண்டுவரும்படி ; பணித்தல் வேண்டும்.

(2) இத்துணைவிதியின் 1 ஆம் பந்தியின் கீழ் தலைவரால் பணிக்கப்பட்ட ஒவ்வொருவரும் அதற்குப் பணிந்து நடக்க வேண்டும்.

5. எவராவது—

(1) ஒரு விளம்பரத்தை, அவ்விளம்பரம் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட முறையில் கட்டப்பட்ட அல்லது எழுப்பப்பட்ட ஒரு முன்னீண்ட அடையாளமாக இருந்தாலன்றி, கட்டிடக் கோட்டிலிருந்து தளப்பாங்காக அளக்கையில் வீதி அல்லது தெரு எதனுள்ளும் ஆறு அங்குலத்திற்கு அதிகமான தூரத்துக்கு நீண்டிருக்கும் படி ஒரு விளம்பரத்தைப் பார்வைக்கு வைப்பிக்கவோ ;

(2) வீதி அல்லது தெரு எதனினும் நீண்டிருக்கும் கட்டட முகப்பு ஒன்றில் அத்தகைய முகப்பின் எல்லைக்கப்பால் நீண்டிருக்கும் அல்லது உயரத்தில் எந்த இடத்திலாவது அதனடிக்கும் நடைபாதைக்கும் அல்லது நிலையத்தின் அடி மட்டத்துக்கும் இடையிலுள்ள தூரத்தில் நான்கிலொரு பங்கிற்கு அதிகமாக இருக்கத்தக்கதாகக் கடைச்சின்னம் எதனையும் பொருத்தி வைக்கவோ அல்லது தொங்கவிடச் செய்யவோ ; அல்லது

(3) தலைவரால் அங்கீகரிக்கப்படாத முறையில் வான் அடையாளம் எதனையும் கட்டுவித்து எழுப்புவிக்கவோ ;

கூடாது.

6. பொது வணக்க ஸ்தலம், பொது நந்தவனம் அல்லது மலசலக் கூடம் அல்லது ஏதாவது பாலம், வீதி, விளக்குத்தூண், தந்தி அல்லது தொலைபேசித்தூண் எதன்மீதும் எவ்விளம்பரத்தையும் எவரும் பார்வைக்கு வைப்பிக்கக்கூடாது.

7. விளம்பரம் எதையும் வெளிப்படுத்தும் பொருட்டு வீதி அல்லது தெரு எதிலும் எவரும் வானொலிப் பெட்டி, கிராமபோன், சங்கீதக் கருவி, மணி அல்லது வேறு கருவி எதனையும் உபயோகிக்கக் கூடாது.

8. (1) விளம்பரம் எதுவும் தலைவரின் அபிப்பிராயப்படி விகாரமான அல்லது ஆட்சேபிக்கத்தக்க நிலையில் இருக்குமிடத்து, எழுத்து மூலமான அறிவித்தல் வாயிலாக அந்த அறிவித்தலில் குறிப்பிடப்படும் காலத் துக்குள் அந்த விளம்பரத்தைப் பிரசித்தம் செய்வதை நிறுத்தும்படி அதனைப் பிரசித்தம் செய்பவருக்கு அவர் கட்டளை இடலாம்.

(2) ஓராம் பந்தியின் கீழ் தலைவரிடமிருந்து ஓர் அறிவித்தலைப் பெறு பவர் அதில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் அவ்வறிவித்தலுக்கு இணங்கி யொழுகுதல் வேண்டும்.

9. விளம்பரங்களைப் பார்வைக்கு வைப்பதற்காக விளம்பரப்பலகை எதனதும் சொந்தக்காரர் அல்லது குத்தகைக்காரர்—

(அ) அந்த விளம்பரப் பலகையைச் செம்மையாகவும் பாதுகாப்பாகவும் வைத்துப் பேண வேண்டும் ; அத்துடன்

(ஆ) அந்த விளம்பரப்பலகையின் முன்புறத்தில் துலக்கமான ஓர் இடத்தில் அவரது பெயரையும், முகவரியையும் தெளிவானதும் எளிதில் வாசிக்கக்கூடியனவுமான எழுத்துக்களில் எழுதி வைக்கவும் வேண்டும்.

10. எந்த விளம்பரத்திலும், அந்த விளம்பரத்தைப் பார்வைக்கு வைப்பதற்குரிய அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணம் செலுத்தியமைக்கு அடையாளமாகத் தலைவரால் இடப்பட்டுள்ள அடையாளம், குறி, எழுத்து, சொல் அல்லது எண் எதனையும் எவரும் உருவழிக்கவோ அல்லது உருவழிப்பிக்கவோ கூடாது.

11. எவரும்—

(அ) தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட முறையில் அல்லது உருவில் அன்றி விளம்பரம் எதனையும் வாகனம் எதிலும் பார்வைக்கு வைப் பித்தல் கூடாது ; அல்லது

(ஆ) பொலிஸ் கண்காணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஒளிய லங்காரம் தவிர்ந்த எந்த ஒளியலங்கார விளம்பரத்தையும் தாங்கிச் செல்லும் வாகனம் எதையும் எவ்வீதியிலும் அல்லது தெருவிலும் செலுத்துவிக்கக்கூடாது.

12. இத்துணைவிதிகளின் ஏற்பாடுகள் எதனையும் மீறி நடக்கும் எவரும் ஒரு தவறைச் செய்தவராகக் குற்றவாளியாகக் காணப்பட்டதன் மேல் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணம் ஒன்றிற்கு ஆளாதல் வேண்டுமென்பதுடன் தொடர்ந்து மீறி நடப்பாராயின் குற்றவாளியாகக் காணப்பட்ட பின்னர் தொடர்ந்தும் அம்மீறிய செயலைச் செய்யும் ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தைந்து ரூபாவுக்கு மேற்படாத மேலதிக குற்றப்பணம் ஒன்றுக்கும் அமைதலும் வேண்டும்.

**13.** இத்துணைவிதிகளில் சந்தர்ப்பம் வேறு வகையில் வேண்டினாலன்றி —

"விளம்பரம்" என்பது காணி, கட்டடம், அல்லது அமைப்பு எதற்கும் மேல் அல்லது எதனிலும் ஒட்டப்பட்டிருக்கும், முற்றுகவோ அல்லது பகுதியாகவோ விளம்பரநோக்கமாக அல்லது விளம்பரப்பாங்காகவுள்ள சொல், எழுத்து, எண், அடையாளம், சுவரொட்டி, பலகை, அறிவித்தல், சின்னம், பிரதி அல்லது ஒப்பாக்கம் எதனையும் உட்படுத்தும் ;

"தலைவர்" என்பது சபையின் தலைவர் எனப் பொருள்படும் ;

"சபை" என்பது மானிப்பாய் பட்டினசபை எனப் பொருள்படும் ;

"விளம்பரப்பலகை" என்பது விளம்பரம் எதனையும் பார்வைக்கு வைத்தற்காக எழுப்பப்படும் அல்லது உபயோகிக்கப்படும் அமைப்பு, ஆதாரம், கம்பம், பலகை, சுவர் ஒட்டி அல்லது வேறு உபாயம் எதுவும் எனப் பொருள்படும்.

"வான் குறி" என்பது வீதி, தெரு, வாய்க்கால் அல்லது ஏரி எதனிலுமுள்ள ஏதாவது ஓர் இடத்திலிருந்து வானத்தைப் பின்னணியாகக் கொண்டு முற்றுகவோ அல்லது பகுதியாகவோ பார்க்கக்கூடியதாகவுள்ள காணி, கட்டடம் அல்லது வேறு அமைப்பு எதிலும் அல்லது எதன்மீதும் உள்ள தூண், தடி, கம்பம், அல்லது சட்டம் எதனிலும் பொருத்தப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட விளம்பர நோக்கத்திற்காக உபயோகிக்கப்படும் சொல், எழுத்து, மாதிரி, குறி, சின்னம் அல்லது ஒப்பாக்கம் எதனையும் குறிப்பதோடு காணி, கட்டடம், அமைப்பு, வீதி அல்லது தெரு எதிலும் அல்லது அதற்கு மேல் விளம்பர நோக்கமாக முற்றுகவேனும் அல்லது பகுதியாகவேனும் உபயோகிக்கப்படும் வாயுக்குண்டு, பாரக்குடை, இழுவண்டி அல்லது ஒத்த உபாயம் எதனையும் உட்படுத்தும்.

அட்டவணை

| | | அனுமதிப்பத்திரங்களுக்கான கட்டண விகிதங்கள் |
|---|---|---|
| (அ) ஓர் ஆண்டிற்கு அல்லது அதன் பாகத்திற்கு ஒவ்வொரு சதுர அடிக்கும் | .. .. | 10 0 |
| (ஆ) ஒவ்வொரு மாதத்திற்கு அல்லது அதன் பாகத்திற்கு விளம்பரக் கொடிகளுக்கு | .. | 25 0 |

4–721—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57

## நாலுவிதம்

**கரிக்கட்டுமூலை தெற்கு கிராமசபைக்குரிய ஐந்து (5) வட்டாரங்களினதும் வீதிகளின் விபரம்**

வட்டாரம்—1

| இல. | பாதையின் பெயர் | விபரம்—எங்கிருந்து எங்குவரை செல்கின்றது | நீளம் | அகலம் |
|---|---|---|---|---|
| 1 | எல்லை முதிரையடி வீதி (நீதவான்தோட்ட வீதி) | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் அ. வே. ப. ஆண்டான்குள வீதி வரை | 1 மைல் .. | 22 அடி |
| 2 | காயாடிக்குள வீதி (துரைராசா தோட்ட வீதி) .. | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் அ. வே. ப. ஆண்டான்குள வீதி வரை | ¾ மைல் .. | 22 அடி |
| 3 | பனையடி–சிரவணன்குடா வீதி (அரசங்குள வீதி) | ஷை ஷை ஷை .. | ½ மைல் .. | 22 அடி |
| 4 | பனையடி வீதி .. .. | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் கடற்கரை வரை .. | ½ மைல் .. | 22 அடி |
| 5 | சிரவணன்குடா வீதி .. .. | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் தென்னைமரவாடி வீதி வரை | 1 மைல் .. | 22 அடி |
| 6 | சொறிக்கேணி வீதி .. .. | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் அ. வே. ப. பிரதான வீதி வரை (16 ம் கட்டை—17 ம் கட்டை) | 1½ மைல் .. | 22 அடி |
| 7 | மகுனி நாகர் தறை வீதி .. .. | சிரவணன்குடா வீதி தொடக்கம் தறை வரை .. | 1 மைல் .. | 22 அடி |
| 8 | குஞ்சுமணற்கேணி வீதி .. .. | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் தென்னைமரவாடி வீதி வரை | ½ மைல் .. | 22 அடி |
| 9 | பாடசாலை வீதி .. .. | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் சொறிக்கேணி வீதி வரை | ½ மைல் .. | 22 அடி |
| 10 | குறுக்கு வீதி .. .. | குஞ்சுமணற்கேணி வீதி தொடக்கம் தென்னைமரவாடி வீதி வரை | ½ மைல் .. | 22 அடி |
| 11 | பத்திரகாளி கோவில் வீதி .. | தென்னைமரவாடி வீதி தொடக்கம் ஊமைச்சியா வீதி வரை .. | ¾ மைல் .. | 22 அடி |
| 12 | மில் வீதி .. .. .. | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் சொறிக்கேணி வீதி வரை | ½ மைல் .. | 22 அடி |
| 13 | கம்பித்தோட்டத்து மூலை வீதி .. | ஷை ஷை ஷை .. | ½ மைல் .. | 22 அடி |
| 14 | கோயில் தறை வீதி .. .. | தென்னைமரவாடி வீதி தொடக்கம் தறை வரை .. | ¾ மைல் .. | 22 அடி |
| 15 | கல்லடிப்பிள்ளையார் கோவில் வீதி .. | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் தென்னைமரவாடி வீதி வரை | ½ மைல் .. | 22 அடி |
| 16 | கரைச்சி வீதி .. .. | தென்னைமரவாடி வீதி தொடக்கம் அ. வே. ப. பிரதான வீதி (கொக்கிளாய்) வரை | 5 மைல் .. | 44 அடி |
| 17 | திருகைதாட்ட அறுகோடை வீதி .. | சொறிக்கேணி வீதி தொடக்கம் கொக்கிளாய்–குளக்கட்டு வீதி வரை | 6 மைல் .. | 66 அடி |

வட்டாரம்—2

| இல. | பாதையின் பெயர் | விபரம்—எங்கிருந்து எங்குவரை செல்கின்றது | நீளம் | அகலம் |
|---|---|---|---|---|
| 1 | இளங்கரையன் வயல் ஓடை (நாணல்வெளி) வீதி | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் நாணல் வெளி வீதி வரையும் | 2½ மைல் .. | 22 அடி |
| 2 | தொடுவாய் வீதி .. .. | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் கடற்கரை வரை .. | 1½ மைல் .. | 22 அடி |
| 3 | முருகன் கோயில் வீதி .. .. | தொடுவாய் வீதி தொடக்கம் அ. வே. ப. பிரதான வீதி வரை (17 ம் கட்டைச் சந்தி) | ½ மைல் .. | 44 அடி |
| 4 | குறுக்கு வீதி ......(I) .. .. | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் முருகன் கோவில் வீதி வரை | 200 யார் .. | 22 அடி |
| 5 | குறுக்கு வீதி ......(II) .. .. | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் முருகன் கோவில் வீதி வரை | 200 யார் .. | 33 அடி |
| 6 | ஊமைச்சியா வீதி .. .. | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் சிறுகடல் வரை .. | 1½ மைல் .. | 66 அடி |
| 7 | குறுக்கு வீதி ......(III) .. .. | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் முருகன் கோவில் வீதி வரை | 150 யார் .. | 38 அடி |
| 8 | குறுக்கு வீதி ......(IV) .. .. | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் ஊமைச்சியா வீதி வரை | 250 யார் .. | 22 அடி |
| 9 | குறுக்கு வீதி ......(V) .. .. | ஷை ஷை ஷை .. | 500 யார் .. | 22 அடி |
| 10 | குறுக்கு வீதி ......(VI) (மேற்கு வீதி) .. | ஷை ஷை ஷை .. | ½ மைல் .. | 22 அடி |

| இல. | பாதையின் பெயர் | விபரம்—எங்கிருந்து எங்குவரை செல்கின்றது | நீளம் | அகலம் |
|---|---|---|---|---|
| 11 | சொறிக்கேணி வீதி | முருகன் கோவில் வீதி தொடக்கம் அறுகோடை வீதி வரை | 250 யார் | 33 அடி |
| 12 | அறுகோடை வீதி ......(I) | முருகன் கோயில் வீதியிலிருந்து அறுகோடை வீதி வரை | ½ மைல் | 22 அடி |
| 13 | அறுகோடை வீதி ......(II) (17 ம் கட்டை கடற்கரை வீதி) | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் கடற்கரை வரை | 1½ மைல் | 44 அடி |
| 14 | வீரகத்திப்பிள்ளையார் கோயில் வீதி | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் கரைச்சி வீதி வரை | ¾ மைல் | 22 அடி |
| | **வட்டாரம்—3** | | | |
| 1 | தெயவத்தங்கோயில் வீதி | அ. வே. ப. பிரதான வீதியிலிருந்து கரைச்சி வீதி வரை | ¼ மைல் | 33 அடி |
| 2 | படுகை வீதி | அ. வே. ப. பிரதான வீதியிலிருந்து அறுகோடை வீதி வரை | 1 மைல் | 33 அடி |
| 3 | தொம்பி இறக்க வீதி | படுகை வீதி தொடக்கம் கருநாட்டுக்கேணி-கடற்கரை வீதி வரை | ½ மைல் | 33 அடி |
| 4 | புளியடி வீதி | அ. வே. ப. பிரதான வீதியிலிருந்து கரைச்சி வீதிவரை | ¼ மைல் | 22 அடி |
| 5 | கோயில் வீதி | ஷை ஷை ஷை | ¼ மைல் | 22 அடி |
| 6 | குருக்கு வீதி ......(I) | அ. வே. ப. பிரதான வீதியிலிருந்து தொம்பி இறக்க வீதி வரை | ¼ மைல் | 22 அடி |
| 7 | பாடசாலை வீதி | அ. வே. ப. பிரதான வீதியிலிருந்து கரைச்சி வீதி வரை | ¾ மைல் | 22 அடி |
| 8 | கருநாட்டுக்கேணி-கடற்கரை வீதி | அ. வே. ப. பிரதான வீதியிலிருந்து கடற்கரை வரை | 1 மைல் | 22 அடி |
| 9 | மடுவடி வீதி | அ. வே. ப. பிரதான வீதியிலிருந்து கரைச்சி வீதி வரை | ½ மைல் | 33 அடி |
| 10 | நல்லதண்ணி ஓடை வீதி | மடுவடி வீதி தொடக்கம் அ. வே. ப. பிரதான வீதி வரை | ¼ மைல் | 33 அடி |
| 11 | பனிச்சங்கேணி வீதி | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் வில்லுவெளி வீதி வரை | 1 மைல் | 33 அடி |
| 12 | குடாத்தறை வீதி | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் கரைச்சி வீதி வரை | ¼ மைல் | 33 அடி |
| | **வட்டாரம்—4** | | | |
| 1 | வில்லுவெளி வீதி ......(1) | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் வில்லுவெளி வரை | ½ மைல் | 22 அடி |
| 2 | வில்லுவெளி வீதி ......(2) | ஷை ஷை ஷை | 150 யார் | 22 அடி |
| 3 | வில்லுவெளி வீதி ......(3) | ஷை ஷை ஷை | 150 யார் | 22 அடி |
| 4 | வில்லுவெளி வீதி ......(4) | ஷை ஷை ஷை | 150 யார் | 22 அடி |
| 5 | வில்லுவெளி வீதி ......(5) | ஷை ஷை ஷை | 150 யார் | 22 அடி |
| 6 | வில்லுவெளி வீதி ......(6) | ஷை ஷை ஷை | 150 யார் | 22 அடி |
| 7 | வில்லுவெளி வீதி ......(7) | ஷை ஷை ஷை | ½ மைல் | 22 அடி |
| 8 | வில்லுவெளி வீதி ......(8) | ஷை ஷை ஷை | ½ மைல் | 22 அடி |
| 9 | குளக்கட்டு வீதி | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் கடற்கரை வரை | 1 மைல் | 44 அடி |
| 10 | பெருவெட்டி வீதி | ஷை ஷை ஷை | 1 மைல் | 44 அடி |
| 11 | கடற்கரை வீதி | ஷை ஷை ஷை | 1 மைல் | 44 அடி |
| 12 | கொக்கிளாய்-கடற்கரை மீன்பிடி இலாகா வீதி | ஷை ஷை ஷை | 1 மைல் | 44 அடி |
| | **வட்டாரம்—5** | | | |
| 1 | வயல்வெளி வீதி ......(1) | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் வயல்வெளி வரை | ½ மைல் | 22 அடி |
| 2 | வட்டுவன் வீதி | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் ஆறு வரைக்கும் | ¾ மைல் | 44 அடி |
| 3 | காயாமோட்டை வீதி | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் கரைச்சி வீதி வரை | ½ மைல் | 22 அடி |
| 4 | வயல்வெளி வீதி ......(2) | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் வயல்வெளி வரை | ¼ மைல் | 22 அடி |
| 5 | வயல்வெளி வீதி ......(3) | ஷை ஷை ஷை | ¼ மைல் | 22 அடி |
| 6 | வயல்வெளி வீதி ......(4) | ஷை ஷை ஷை | ¼ மைல் | 22 அடி |
| 7 | சிப்பிவயல் குறுக்கு வீதி | ஷை ஷை ஷை | ¾ மைல் | 22 அடி |
| 8 | பாடசாலை வீதி | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் அம்மன் கோயில் வீதி வரை | 300 யார் | 22 அடி |
| 9 | அம்மன் கோயில் வீதி | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் கரைச்சி வீதி வரை | ½ மைல் | 22 அடி |
| 10 | பழைய பாடசாலை வீதி | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் ஆஸ்பத்திரி வீதி வரை | 300 யார் | 22 அடி |
| 11 | ஆஸ்பத்திரி வீதி ......(1) | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் கரைச்சி வீதி வரை | ½ மைல் | 22 அடி |
| 12 | ஆஸ்பத்திரி வீதி ......(2) | ஷை ஷை ஷை | ½ மைல் | 22 அடி |
| 13 | சிந்தாத்திர மாதா கோவில் வீதி | ஷை ஷை ஷை | ½ மைல் | 22 அடி |
| 14 | வயல்வெளி வீதி ......(5) | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் வயல்வெளி வரை | ¼ மைல் | 22 அடி |
| 15 | இலந்தைமுனை மீன்பிடி இலாகா வீதி | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் ஆறு வரை | 1 மைல் | 22 அடி |
| 16 | ஐயன் கோயில் வீதி | அ. வே. ப. பிரதான வீதி தொடக்கம் கரைச்சி வீதி வரை | ½ மைல் | 22 அடி |

மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் சபை அங்கத்தவர்கள் முன்பாக பரிசீலனை செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கத்தவர்கள் ஒப்பம் :

1. க. மயில்வாகனம்
2. சு. மயில்வாகனம்

தலைவர்,
கரிக்கட்டுமூலை தெற்கு கிராமசபை.

4-660—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57

**1952 ஆம் ஆண்டின் 6ம் இலக்க உள்ளூரதிகார தாபனங்கள் (நிலையான உபவிதிகள்) பற்றிய சட்டம்**

உள்ளூரதிகார தாபனங்கள் (நிலையான உபவிதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் கீழ் திருகோணமலை மாவட்டத்து ஆலங்கேணி கிராம சபைப் பிரதேசத்தின் கிராம சபையினால் நிறைவேற்றப்பட்ட கீழ்காணும் தீர்மானம் அப்பிரிவின் நியதிப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

தீர்மானம்

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1953 ம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 10 ஆம் திகதியின் 10,517 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு 1953 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 7 ம் திகதியின் 10,560 ஆம் இலக்க வர்த்தமானியில் அவ்வங்கீகாரம் பிரசுரிக்கப்பட்ட நிலையான உபவிதிகளின் 1 தொடக்கம் 37 முடியவுள்ள பாகங்களில் பகுதி 5 ல் 4 ஆம் உட்பிரிவை நீக்கியும் உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1963 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆம் திகதியின் 13,679 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு 1965 ஆம் ஆண்டு தை மாதம் 8 ஆம் திகதியின் 14,287 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அதே நிலையான உபவிதிகளின் 38 ஆம் பாகத்தையும் உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு யூலை மாதம் 8 ஆம் திகதியின் 14,703 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு 1969 ஆம் ஆண்டு தை மாதம் 3 ஆம் திகதியின் 14,835 ஆம் இலக்க வர்த்தமானியில் அவ்வங்கீகாரம் பிரசுரிக்கப்பட்ட அதே நியமத் துணைவிதியின் 39 ஆம் 40 ஆம் 41 ஆம் பாகங்களையும் இத்தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வதென்று ஆலங்கேணி கிராம சபை உள்ளூரதிகார தாபனங்கள் நிலையான உபவிதிகளின் சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.

கோ. செல்லத்தம்பி,
தலைவர்,
ஆலங்கேணி கிராம சபை.

கிண்ணியா, 1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 23 ந உ.

4–650—27.04.73 ந் திகதிய வர்த்தமானி இல. 57.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| மே .. | 4.5.73 | வெள்ளி .. | 27. 4.73 | வெள்ளி .. | ந. ப. | 12.00 |
| | 11.5.73 | வெள்ளி .. | 4. 5.73 | வெள்ளி .. | ந. ப. | 12.00 |
| | 18.5.73 | வெள்ளி .. | 11. 5.73 | வெள்ளி .. | ந. ப. | 12.00 |
| | 25.5.73 | வெள்ளி .. | 18. 5.73 | வெள்ளி .. | ந. ப. | 12.00 |
| யூன் .. | 1.6.73 | வெள்ளி .. | 25. 5.73 | வெள்ளி .. | ந. ப. | 12.00 |
| | 8.6.73 | வெள்ளி .. | 1. 6.73 | வெள்ளி .. | ந. ப. | 12.00 |
| | 14.6.73 | வியாழன் .. | 8. 6.73 | வெள்ளி .. | ந. ப. | 12.00 |
| | 22.6.73 | வெள்ளி .. | 14. 6.73 | வியாழன் .. | ந. ப. | 12.00 |
| | 29.6.73 | வெள்ளி .. | 22. 6.73 | வெள்ளி .. | ந. ப. | 12.00 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.